தி.மு.க. இளைஞர் அணி

இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வ. எண்	நாள்	கழக மாவட்டம்	சட்டமன்றத் தொகுதி	இடம்	பேச்சாளர்கள்
1	24.03.2025	தஞ்சாவூர் வடக்கு	பாபநாசம்	அண்ணா சிலை அருகில், பசுபதிக்கோயில்	வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பூர்ணிமா
2	25.03.2025	தஞ்சாவூர் தெற்கு	பட்டுக்கோட்டை	மதுக்கூர் பேருந்து நிலையம், பட்டுக்கோட்டை	துரை சம்பத், பார்வின்
3	25.03.2025	சென்னை கிழக்கு	துறைமுகம்	ரமணன் தெரு, யானைக்கவுனி	மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மு.மு.முஸ்தாக்
4	25.03.2025	சென்னை கிழக்கு	வில்லிவாக்கம்	ஜாயின்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம்	எழுத்தாளர் வே.மதிமாறன், நரேன் கௌதம்

அன்பகம், சென்னை – 18.
நாள் : 22–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

பெரம்பலூர் மாவட்டம்! ஆலத்தூரில் முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

பெரம்பலூர், மார்ச் 24- பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் திருவிளக்குறிச்சி கிராமத்தில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் கெ.வல்லபன் தலைமையில், தகவல் தொழில் நுட்ப அணி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ஆர்.ஆனந்தன் வரவேற்புரையில், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பெ.சுதா, சிரா.விஜய், ப.சித்திரன், அ.திணேஷ், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முல்லைச்செல்வன், குன்னம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சிவனேசன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் ராஜா, அ.யசோதா, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.அஜித்குமார், எம்.சுகந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், விராலிமலை சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சொ.தமிழினியன், தலைமைக் கழகப் பேச்சாளர் என்னை ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். 2026 ஆம் ஆண்டும் தி.மு.க. வெற்றி வெற்றி பெறுவது உறுதி என்று உறுதிமொழியேற்கப்பட்டது.

இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் துணை ஆதவன்(எ)ஹரி பாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.அருண், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.ராகவி, ஆலத்தூர் ஒன்றிய கழக நிர்வாகிகள் அ.ராமராஜ், அ.சரவணன், அ.சந்திரமோகன், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா, மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.அழகுவேல், ம.பாஞ்சாலை உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருவிளக்குறிச்சி கிளைச் செயலாளர் சின்னதுரை நன்றியுரையாற்றினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ்.பி.சேசுராசன்
மார்ச் 24 (2022)



தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக கொரடாச்சேரி ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும் – இரண்டு முறை ஒன்றியக்குழு துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் அ.ராமராஜ் மறைவு!

வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

பெரம்பலூர், மார்ச் 24- பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய அவைத்தலைவரும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான சிறுவயலூர் கிராமத்தைச் சேர்ந்த அ.ராமராஜ் உடல்நலக்குறைவால் (22.03.2025), சனிக்கிழமை காலையில் மறைவெய்தினார்.

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்,சிறுவயலூர் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் கெ.வல்லபன் ஆகியோர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், ஆர்.அருண் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

22.03.2025, ஞாயிற்றுக்கிழமை அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் கழக நிர்வாகிகள், தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆலங்குடி சிவ.பாலகிருஷ்ணன்
மார்ச் 24 (2007)

தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழக பணியாற்ற தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் ஆலங்குடி வட்டக் கழகத்தின் முதல் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

பாச்சிக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவராகவும் – புதுக்கோட்டை சமஸ்தான கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர், திருச்சி மாவட்ட நூலக ஆணைக்குழு துணைத் தலைவர், புதுக்கோட்டை அக்ரோ நிலவள வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி, வோளாண்மை கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

1965 இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாத சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.